Literacy for a Billion

Movie: Naanayam
Year: 2010

Song: Naan Pokiren
Lyricist: Thamarai

நான் போகிறேன் மேலே மேலே
பூலோகமே கான் கீழே
விண்மீன்களின்
கூட்டம் என் மேலே
பூவாளியின் நீரை போலே
நீ சிந்தினாய் எந்தன் மேலே
நான் பூக்கிறேன்
பன்னீர் பூ போலே
தடுமாறி போனேன் அன்றே
உன்னை பார்த்த நேரம்
அடையாளம் இல்லா ஒன்றை
கண்டேன் நெஞ்சின் ஓரம்
ஏன் உன்னை பார்த்தேன் என்றே
உள்ளம் கேள்வி கேட்கும்
ஆனாலும் நெஞ்சம்
அந்த நேரத்தை நேசிக்கும்
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாநநா
நான் போகிறேன் மேலே மேலே
பூலோகமே கான் கீழே
விண்மீன்களின்
கூட்டம் என் மேலே
பூவாளியின் நீரை போலே
நீ சிந்தினாய் எந்தன் மேலே
நான் பூக்கிறேன்
பன்னீர் பூ போலே
தடுமாறி போனேன் அன்றே
உன்னை பார்த்த நேரம்
அடையாளம் இல்லா ஒன்றை
கண்டேன் நெஞ்சின் ஓரம்
ஏன் உன்னை பார்த்தேன் என்றே
உள்ளம் கேள்வி கேட்கும்
ஆனாலும் நெஞ்சம்
அந்த நேரத்தை நேசிக்கும்

ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாநநா

கண்ணாடி முன்னே நின்றே
தனியாக நான் பேசும்
யாரேனும் ஜன்னல் தாண்டி
பார்த்தால் அய்யோ
உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டும்
அறையினுள் நீ வந்தாய்
கை நீட்டி தொட்டு பார்த்தேன்
காற்றை அய்யோ
என் வீட்டில் நீயும் வந்து
சேரும் காலம் எக்காலம்
பூமாலை செய்தேன் வாடுதே
எண்ணத்தை தேடும்
போர்வை யாவும்
சேலை ஆகாதோ
வாராதோ அந்நாளும்
இன்றேதான்
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாநநா
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாநநா

என் தூக்கம் வேண்டும் என்றாய்
தரமாட்டேன் என்றேனே
கனவென்னும் கள்ளச்சாவி
கொண்டே வந்தாய்
வார்த்தைகள் தேடி தேடி
நான் பேசி பார்த்தேனே
மவுனத்தில் பேசும் வித்தை
நீதான் தந்தாய்

அன்றாடம் போகும்
பாதை யாவும்
இன்று மாற்றங்கள்
காணாமல் போனேன் பாதியில்
நீ வந்து என்னை
மீட்டுச் செல்வாய்
என்று இங்கேயே
கால் நோக கால் நோக
நின்றேன்
நான் போகிறேன் மேலே மேலே
பூலோகமே கான் கீழே
விண்மீன்களின்
கூட்டம் என் மேலே
ஆ...
பூவாளியின் நீரை போலே
நீ சிந்தினாய் எந்தன் மேலே
நான் பூக்கிறேன்
பன்னீர் பூ போலே
ஆ...
தடுமாறி போனேன் அன்றே
உன்னை பார்த்த நேரம்
அடையாளம் இல்லா ஒன்றை
கண்டேன் நெஞ்சின் ஓரம்
ஏன் உன்னை பார்த்தேன் என்றே
உள்ளம் கேள்வி கேட்கும்
ஆனாலும் நெஞ்சம்
அந்த நேரத்தை நேசிக்கும்
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாந
ந நாநந் நாநந் நாநநா

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.